**அனுப்புநர்**

மாவட்ட ஆட்சித் தலைவர்,
நீலகிரி மாவட்டம்.

**பெறுநர்**

மாவட்ட தகவல் தொடர்பு அலுவலர்,
மாவட்ட தேசிய தகவலியல் மையம்,
நீலகிரி மாவட்டம்.

**<u>ந.க.டி2.எண்.14701249/2026, நாள். 08.2026</u>**

**அய்யா/அம்மையீர்,**

**பொருள்** – பணியமைப்பு ஊரக வளர்ச்சி –மற்றும் ஊராட்சி அலகு – நீலகிரி மாவட்டம் – அரசு தலைப்பின் கீழ் SC/ST பிரிவு குறைவு பணியிடங்கள் நிரப்புதல் – விண்ணப்பத்தினை நீலகிரி மாவட்ட இணையத்தில் பதிவேற்றம் செய்தல் – தொடர்பாக.

**பார்வை** – ஆணையர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககம், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.47268/2015/எப்1, நாள்.03.07.2026, 23.07.2026 மற்றும் 04.08.2026

ooOoo

பார்வையில் காணும் ஆணையர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககம், சென்னை அவர்களின் கடிதத்தில், 30.04.2026 அன்றைய தேதியில் நீலகிரி மாவட்ட ஊரக வளர்ச்சி அலகில் அரசுத் தலைப்பில் உள்ள ஒரு பதிவறை எழுத்தருக்கான பணியிடம் கீழ்க்காணுமாறு SC–க்கான குறைவு பணியிடமாக கண்டறியப்பட்டு கண்டறியப்பட்ட குறைவு பணியிடங்களை தெரிவு முகமையின் மூலமாக சிறப்பு ஆட்சேர்ப்பு முகாம் மூலம் நிரப்பிட நடவடிக்கை மேற்கொண்டு அதன் விவரத்தை அனுப்பிவைக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, நீலகிரி மாவட்ட ஊரக வளர்ச்சி அலகில் அரசுத் தலைப்பில் உள்ள ஒரு பதிவறை எழுத்தருக்கான SC–க்கான குறைவு பணியித்தினை நிரப்பும் பொருட்டு மாநில அளவிலான இரண்டு நாளிதழ்களில் **31.08.2026** அன்று விளம்பரம் செய்யப்பட்டதைத் தொடர்ந்து, விண்ணப்பதாரர்கள் **31.08.2026** அன்று முதல் நேரடியாக விண்ணப்பத்தினை **https://nilgiris.nic.in** என்ற இணையதளத்தில் பதிவிறக்கம் செய்து விண்ணப்பிக்கும் பொருட்டு விண்ணப மாதிரியை இணையதள முகப்பு பக்கத்தில் பதிவேற்றம் செயுமாறு கேட்டுக்கொள்கிறேன் .

**இணைப்பு** – அறிவிக்கை மற்றும் விண்ணப்ப மாதிரி

**மாவட்ட ஆட்சியருக்காக,**
**நீலகிரி மாவட்டம்.**

**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை**

**நீலகிரி மாவட்டம் அரசுத் தலைப்பின் கீழ் காலியாக உள்ள ஆதிதிராவிடர் குறைவு பதிவறை எழுத்தர் பணியிடத்தை சிறப்பு ஆட்சேர்ப்பு முகாம் மூலம் நிரப்புவதற்கான அறிவிக்கை**

**<u>அறிவிப்பு எண் .டி2/14701249/ 2026</u>** **<u>நாள் 27.08.2026</u>**

நீலகிரி மாவட்டம், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகில், அரசு தலைப்பின் கீழ் காலியாக உள்ள ஆதிதிராவிடர் குறைவு பதிவறை எழுத்தர் பணியிடத்தை சிறப்பு ஆட்சேர்ப்பு முகாம் மூலம் நிரப்பும் பொருட்டு தகுதியான நபர்களிடமிருந்து 31.08.2026 முதல் 29.09.2026 மாலை 5.45 வரை நேரடியாக மட்டுமே விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

| பொருள் (பதவி) | | | பதிவறை எழுத்தர் |
|---|---|---|---|
| 1. | ஊதியம் | – | 15,900–58,500<br>( ஊதிய நிலை –2) |
| 2. | 01.07.2026 அன்று அதிகபட்ச வயது வரம்பு | – | ஆதிதிராவிடர் / ஆதரவற்ற விதவை: 18 முதல் 37 வரை<br>மாற்றுத்திறனாளிகள்: அதிகபட்ச வரம்பிலிருந்து 10 ஆண்டுகள் வரை நீடிப்பு<br>முன்னாள் இராணுவ வீரர்கள் ஆதிதிராவிடர் (வேறு எந்த அரசுப் பணிக்கு தேர்ந்தெடுக்கப் பட்ட முன்னாள் இராணுவ வீரர்கள் மேற்கண்ட வயதுச் சலுகையை பெற இயலாது): 18 முதல் 55 வரை |
| 3. | மொத்த பணியிடங்கள் | – | 1 (ஒன்று) |
| 4. | இன சுழற்சி விவரங்கள் | – | ❖ ஆதிதிராவிடர் (பொது)<br>SC (G) |
| 5. | கல்வித் தகுதி | – | ❖ பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். |
| 6. | விண்ணப்ப கட்டணம் | – | ❖ ஆதிதிராவிடர் மற்றும் மாற்றுத்திறனாளிகள் , முன்னாள் இராணுவ வீரர்கள் மற்றும் ஆதரவற்ற விதவைகள் – ரூ.50/– |
| 7. | கடைசி நாள் | – | 29.09.2026 |

**<u>நிபந்தனைகள்–:</u>**

1. விண்ணப்பதாரர்கள் விண்ணப்பங்களை நிர்ணயிக்கப்பட்டுள்ள படிவத்தில் பூர்த்தி செய்து **29.09.2026** அன்று பிற்பகல் **5.45** மணிக்குள் நேரில் கீழ்க்காணும் முகவரியில் சமர்பிக்க வேண்டும். காலம் கடந்து வரப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படாது.

**மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் ,(வ)**
**மாவட்ட ஆட்சியரகம் ,(வளர்ச்சிப்பிரிவு)**
**உதகமண்டலம்–643001**

2. விண்ணப்பதாரர்கள் கல்வித்தகுதி, சாதிச்சான்று, வயது ஆதார சான்று ஆகியவைகளுக்கு ஆதாரத்தின் நகல்களில் சுய சான்றொப்பமிட்டு விண்ணப்ப படிவத்துடன் இணைக்கப்பட வேண்டும். இனசுழற்சி, வயது மற்றும் கல்வி தகுதியுள்ள நபர்களிடமிருந்து பெறப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்கப்படும்.
3. விண்ணப்பதாரர்கள் விண்ணப்பத்திற்கான கட்டணத்தை நீலகிரி மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி) அவர்களின் பெயரிலான இந்தியன் வங்கி கணக்கு எண் (Indian Bank Account Number: 8038019227) (IFSC Code. IDIB000S004) ற்கு – செலுத்தி அதற்கான ரசீதினை விண்ணப்பத்துடன் இணைத்து சமர்பிக்க வேண்டும்.
4. எந்த ஒரு விண்ணப்பத்தையும் நிராகரிக்கும் அதிகாரம் நியமன அலுவலருக்கு உண்டு.
5. தகுதியுள்ள விண்ணப்பதாரர்களுக்கு சான்றிதழ் சரிபார்ப்பு மற்றும் நேர்முக தேர்வு நடைபெறும் இடம் & தேதி குறித்து நேர்காணல் கடிதம் அனுப்பி வைக்கப்படும்.

மேற்படி, ஆதிதிராவிடர் குறைவு பதிவறை எழுத்தர் காலிப்பணியிடத்திற்கான விண்ணப்பபடிவம் https://nilgiris.nic.in என்ற நீலகிரி மாவட்ட இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

**மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வ),**
**நீலகிரி மாவட்டம்**

**நீலகிரி மாவட்டம்**
**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகு**
**அரசுத் தலைப்பு ஆதிதிராவிடர் குறைவு பதிவறை எழுத்தர் பணியிடத்தை சிறப்பு ஆட்சேர்ப்பு முகாம் மூலம் நிரப்புவதற்கான விண்ணப்பம்**

விண்ணப்பம் துவங்கும் நாள்: 31.08.2026
விண்ணப்பம் சமர்பிக்க வேண்டிய கடைசி நாள்: 29.09.2026

| | |
|---|---|
| **விண்ணப்ப எண்.** | **விண்ணப்பம் பெறப்பட்ட நாள்.** |

| | | | |
|---|---|---|---|
| 1. | **விண்ணப்பதாரரின் பெயர் (தலைப்பெழுத்துடன்)** | | **புகைப்படம்** |
| 2. | **தந்தை / பாதுகாவலர் / துணையின் பெயர் (தலைப்பெழுத்துடன்)** | | |
| 3. | **கல்வி தகுதி** | | |
| 4. | **மதம்** | | |
| 5. | **வகுப்பு & உட்பிரிவின் பெயர்** | | |
| 6. | **பாலினம்** | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 7. | **பிறந்த தேதி** | **நாள்** | **மாதம்** | **வருடம்** |
| | | | | |
| 8. | **வயது (01.07.2026 அன்றைய நிலையில்)** | **நாள்** | **மாதம்** | **வருடம்** |
| | | | | |

| | | |
|---|---|---|
| 9. | **பத்தாம் வகுப்பு சான்றிதழ் எண்** | |
| 10. | **பத்தாம் வகுப்பில் பெற்ற மதிப்பெண்கள்** | |
| 11. | **தொடர்பு முகவரி**<br>**கதவு எண்.**<br>**தெருவின் பெயர்**<br>**கிராமத்தின் பெயர்**<br>**வட்டம் பெயர்**<br>**மாவட்டத்தின் பெயர்**<br>**அஞ்சல் குறியீட்டு எண்** | |

| | | | |
|---|---|---|---|
| 12. | **கைபேசி எண்** | | |
| 13. | **மின்னஞ்சல் முகவரி** | | |
| 14. | **முன்னாள் இராணுவ வீரர்** | ஆம் | இல்லை |
| 15. | **ஆதரவற்ற விதவை** | ஆம் | இல்லை |
| 16. | **மாற்றுத்திறனாளி** | ஆம் | இல்லை |
| 17. | **வேலை வாய்ப்பு பதிவு விவரம் (இருப்பின்)** | **பதிவு எண்** | |
| | | **பதிவு நாள்** | |
| | | **புதுப்பிக்க வேண்டிய நாள்** | |

| | **சரிபார்ப்பு பட்டியல்** | **பொருத்தமானவற்றை (✔) செய்யவும்** |
|---|---|---|
| 1. | **கடைசியாக பயின்ற பள்ளி / கல்லூரியின் மாற்றுச் சான்றிதழின் நகல்*** | |
| 2. | **வகுப்பு சான்றிதழின் நகல்*** | |
| 3. | **பத்தாம் வகுப்பு சான்றிதழின் நகல்*** | |
| 4. | **கட்டணம் செலுத்தியதற்கான ரசீது*** | |
| 5.. | **முன்னாள் இராணுவ வீரர்/ ஆதரவற்ற விதவை/ மாற்றுத்திறனாளி சான்றிதழின் நகல் (பொருந்தும் நேர்வில்)** | |

**(* குறியீடு இடப்பட்ட சான்றிதழ்களின் நகல் கட்டாயமாக இணைக்கப்பட வேண்டும்)**

## உறுதி மொழி

மேற்குறிப்பிட்ட விவரங்கள் யாவும் சரியானவை என உறுதியளிக்கிறேன்.இதில் ஏதேனும் தவறுகள் ஏற்பட்டால் அதன் மீது எடுக்கப்படும் அனைத்து விதமான நடவடிக்கைகளுக்கும் நான் கட்டுப்படுவேன் எனவும், மேலும் என் மீது குற்றவியல் வழக்கு ஏதும் பதியப்படவில்லை எனவும் உறுதியளிக்கிறேன்.

**இடம்:**

**நாள்:** **விண்ணப்பதாரர் கையொப்பம்**